அங்கே நான் வருகிறபோது, அந்த இடங்களைப் பார்வையிட்டு, அதற்குப் பிறகு என்னென்ன செய்ய வேண்டுமோ அதை எல்லாம் செய்வோம்.

தன்னிறைவுத் திட்டம்.

*1571. திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியங்களுக்கான தன்னிறைவுத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

நகர பஞ்சாயத்துக்களைச் சேர்த்தல்.

* 2246. திரு. எஸ். டேனியல்ராஜ்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி., போன்ற திட்டங்களில் நகர பஞ்சாயத்துக்களும் சேர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1990–91 முதல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் முழு அளவில் அனைத்து பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப் படும். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நில மற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம் ஆகிய திட்டங்கள் நடப்பு ஆண்டு முதல் ஒருங்கிணைக்கப்பட்டு ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம் என்ற பெயரில் அமல்படுத்தப்படும்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி. மற்றுமுள்ள ஜவகர் வேலைவாய்ப்பு திட்டங்களோடு உணவுக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தையும் அரசு அமுல்படுத்துமா ?

1990 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்கள் இணைக்கப்பட்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் என்பது அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

9-45 மணி

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின்கீழ் பயன் பெறுபவர்களை தேர்ந்தெடுக்க டாஸ்க் போர்ஸ் கமிட்டி என்று ஏற்படுத்தப்பட்டு, அதில் சட்டமன்ற உறுப்பினர்கள் இணைக்கப்பட்டார்கள். அந்தக் கமிட்டிகள் செயல்படவில்லை என்பதால் அதிகாரிகளே தேர்வு செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : இது தொடர்புடைய கேள்வியல்ல.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நகரப் பஞ்சாயத்துக்களைப் போலவே, நகரியங்களும் இது போன்ற திட்டங்களிலே இப்போது சேர்க்கப்படுவதில்லை. நகரியப் பகுதிகளில் பின்னடைந்த கிராமங்கள் இருப்பதால், அவற்றுக்கும் இந்தத் திட்டங்கள் நீட்டிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுவரையில் ஊராட்சி மன்ற எல்லைக்கு மட்டும்தான் கிராமங்கள் என்று பெயரிட்டு அழைக்கப்பட்டு, இந்தத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வந்தது. பேரூராட்சி என்ற பெயரில் உள்ளவையும் பெரிய கிராமம், பெரிய ஊராட்சிதான். ஆகையால் இந்தத் திட்டங்கள் அங்கேயும் அமுல்படுத்தப்படலாம் என்று மத்திய அரசிடம் கேட்கப்பட்டு, அந்தத் திட்டம் தற்போது பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட இருக்கிறது. நகரியம் என்று நாமே சொல்ல ஆரம்பித்த பிறகு, அதைப் பற்றி பிறகுதான் யோசிக்க வேண்டும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரூராட்சிகளில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் எந்தெந்தத் திட்டங்களை இந்த ஆண்டு செயல்படுத்துவதற்கு அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுவரை கிராமங்களில் எந்தெந்தத் திட்டங்கள், எந்தெந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறதோ அவைகள் அனைத்தும் பேரூராட்சிகளிலும் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரூராட்சிகளில் கூட, கிராமப் பஞ்சாயத்துக்கள் போன்றுதான் பல உட்கிராமங்கள் பேரூராட்சிகளுக்கு உட்பட்டு இருக்கின்றன. எந்தத் திட்டம் வந்தாலும் பேரூராட்சி என்ற அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது. கிராமங்களையும், பேரூராட்சிகளையும் தகுதி அடிப்படையில் பார்த்தால் ஒரே நிலைமைதான் இருக்கிறது. எனவே, இந்தத் திட்டங்களை பேரூராட்சிகளிலும் விரிவுபடுத்தும் வகையில் அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவரவர்களே, கேள்வியே அதுதான். எனவே இந்த ஆண்டு விஸ்தரிக்க இருக்கிறோம் என்பதை அறிவித்திருக்கிறேன். அனைத்துத் திட்டங்களும் எல்லாப் பேரூராட்சிகளுக்கும் அமல்படுத்தப்படும்.

ரேஷன் கடைகளில் விநியோகப் பதிவேட்டைச் சரிபார்த்தல்

* 5778. திரு. பி. காளியப்பன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குடிமைப் பொருள் வழங்கும் கடைகளில் நடைபெறும் ஒழுங்கீனத்தை தடுக்க அரசு ரேஷன் கடைகளில் உள்ள விநியோக பதிவேட்டுடன் மக்களின் ரேஷன் கார்டுகளை சரிபார்க்கும் நடைமுறையை செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

நியாயவிலைக் கடைகள் தீவிர தணிக்கை செய்யப்படும் போது அக்கடைகளில் பராமரிக்கப்படும் விநியோகப் பதிவேட்டுடன் குடும்ப அட்டையில் பதிவு செய்யப்படும் பதிவுகள் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். இது ஏற்கனவே நடைமுறையில் உள்ளது ஆகும்.

திரு. பி. காளியப்பன் : அவைத் தலைவரவர்களே, நகரங்களில் பால் வழங்கும்போது அட்டையை பஞ்ச் செய்வதுபோல குடிமைப் பொருள் வழங்கும்போதும் அந்த அட்டையை பஞ்ச் செய்து கொடுக்கும் முறை அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பஞ்ச் செய்கின்ற முறை இப்போது பின்பற்றப்படவில்லை. மாறாக அதில் அடையாளம் வைக்கும் முறைதான் இப்போது பின்பற்றப்படுகிறது.